RNI-N0: TNTAM/2021/83936

Postel Regd. No: TN/5/SVA/2023-2025




# மாலை தந்தி

MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

DAILY EVENING · மாலை நாளிதழ்




சிவகங்கை | மலர்-4 | இதழ்-12 | 12 ஜனவரி ஞாயிற்றுக்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ.5

## பாலியல் குற்ற வழக்குகளை விசாரிக்க 7 சிறப்பு நீதிமன்றங்கள்
### பேரவையில் முதல்வர் ஸ்டாலின் அறிவிப்பு

சென்னை ஜன.12

தமிழக சட்டப் பேரவையில் ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீதான விவாதத்துக்கு பதிலளித்து பேசிய முதல்வர் மு.க. ஸ்டாலின், கடந்த 3 நாட்களில் மொத்தம் 25 உறுப்பினர்கள் பேசியிருக்கிறார்கள். ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது 10 உறுப்பினர்கள் 112 திருத்தங்களை வழங்கியிருக்கிறார்கள். இந்த அரசுக்கு உதவுகிறவகையில் பல்வேறு ஆக்கப்பூர்வமான ஆலோசனைகளையும், விமர்சனங்களையும் தெரிவித்திருக்கிறார்கள்.



- பெண்களுக்கு எதிரான பாலியல் குற்ற வழக்குகளை விசாரிக்க மதுரை, திருநெல்வேலி, கோயம்புத்தூர், சேலம், திருச்சி, சென்னை மற்றும் சென்னையின் சுற்றுப்புற பகுதிகளில் ஏழு தனிச் சிறப்புநீதிமன்றங்கள் புதிதாக அமைக்கப்படும். இத்தகைய குற்றங்கள் தொடர்பான வழக்குகளை விரைந்து முடிக்க, மாவட்டந்தோறும் கூடுதல் காவல் கண்காணிப்பாளர் தலைமையில சிறப்புக் குழு அமைக்கப்படும். பாலியல் குற்றங்களில் தண்டனை பெற்று, சிறையில் இருக்கின்ற கைதிகளுக்கு, முன்விடுதலை கிடைக்காத வகையில தமிழ்நாடு சிறைத் துறை விதிகள் திருத்தம் செய்யப்படும்.
- மாநிலத்தின் நகர்ப்புர உள்ளாட்சி, உள்ளாட்சி அமைப்புகளை ஒட்டியுள்ள கிராமங்களும் மிக விரைவாக வளர்ச்சி அடைந்து வருவதால் பல்வேறு மாநகராட்சிகள், நகராட்சிகள், பேரூராட்சி அமைப்புகளின் சாலைகள் விரிவாக்கம் செய்யப்பட உள்ளன. புதிய மாநகராட்சிகள், நகராட்சிகள் உதயமாகி இருக்கின்றன. இந்த நகரங்களில் வாழும் மக்களின் அடிப்படைத் தேவைகளை நிறைவு செய்யும்வகையில் இந்த அரசு பல்வேறு முயற்சிகளை எடுத்து வருகிறது. அதன் ஒரு பகுதியாக தமிழகத்திலுள்ள சென்னை, மதுரை, கோவை உள்ளிட்ட பல்வேறு மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகள், பேரூராட்சிகளில் புதிய சாலைகளை அமைத்திடவும், பழுதடைந்துள்ள சாலைகளை சீரமைத்து புதுப்பித்திடவும், குடிநீர் மற்றும் பாதாள சாக்கடைகளால் சேதப்பட்டுள்ள சாலைகளை சீரமைத்திடவும் வரும் ஆண்டுகளில் 3 ஆயிரத்து 750 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நகர்ப்புர சாலை பணிகள் மேற்கொள்ளப்படும்.
- பல்வேறு கோரிக்கைகளை ஏற்று மக்களுக்கான போக்குவரத்து வசதியை மேம்படுத்த வரும் ஆண்டில் 3,000 புதிய பேருந்துகள் கொள்முதல் செய்யப்பட்டுபயன்பாட்டுக்கு விரைந்து கொண்டு வரப்படும்.
- இந்த அரசு பதவி ஏற்றபின் ஏழை எளிய பட்டியலின மக்களுக்கு 2 லட்சத்து 67 ஆயிரத்து 437 மனைகளை வரன்முறைப்படுத்தி இபட்டா வழங்கப்பட்டிருக்கின்றன. அடுத்த இரண்டு ஆண்டுகளில், அவர்களின் தேவைகளை பூர்த்தி செய்யும் விதமாக கையகப்படுத்தப்பட்ட நிலங்களை சீர்செய்தும் புதியதாக நிலங்களை கையகப்படுத்தியும் ஒரு லட்சம் வீட்டுமனைப் பட்டாக்கள் அவர்களுக்கு வழங்கப்படும், என்பது உள்ளிட்ட அறிவிப்புகளை முதல்வர் ஸ்டாலின் வெளியிட்டார்.

## பொள்ளாச்சி விவகாரம்: சட்டப்பேரவையில் அப்பாவு வழங்கிய தீர்ப்பு!

சென்னை, ஜன.12

அண்ணா பல்கலைக் கழக பாலியல் விவகாரம் தமிழகம் முழுக்க பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியது. இந்த விவகாரம் தொடர்பாக அதிமுக உள்ளிட்ட எதிர்கட்சிகள் சட்டப்பேரவையில் அரசை நோக்கி கேள்வி எழுப்பினர். இது தொடர்பான விவாதம் சட்டப்பேரவையில் தொடர்ந்து நடைபெற்று வந்தது.



"அண்ணா பல்கலைக்கழக மாணவி தரப்பில் புகார் அளிக்கப்பட்ட உடன் உடனடியாக குற்றவாளி கைது செய்யப்பட்டார். ஆனால் கடந்த அதிமுக ஆட்சியில் நிகழ்ந்த பொள்ளாச்சி பாலியல் கொடுமை சம்பவத்தில் பாதிக்கப்பட்டவர்கள் புகார் அளித்துமே கூட உடனடியாக வழக்கு பதிவு செய்யவில்லை. அதிமுக அரசை நோக்கி பல்வேறு விமர்சனங்கள் எழுந்த பின்னர் 12 நாள்களுக்கு பிறகு தான் குற்றவாளிகள் கைது செய்யப்பட்டனர்" என்று முதல்வர் ஸ்டாலின் சட்டமன்றத்தில் கூறினார்.

இதை மறுத்த எதிர்கட்சித் தலைவர் எடப்பாடி பழனிசாமி உடனடியாக வழக்கு பதிவு செய்து கைது நடவடிக்கை மேற்கொண்டதாக கூறினார்.

ஆனால் முதல்வர் ஸ்டாலின் இதை ஏற்றுக்கொள்ளவில்லை. நீங்கள் உடனே நடவடிக்கை எடுக்கவில்லை என்பதற்கு ஆதாரம் என்னிடம் இருக்கிறது. குற்றவாளியை விரைந்து கைது செய்ததற்கான ஆதாரம் இருந்தால் சபாநாயகரிடம் அதை வழங்குங்கள் என்று கூறினார்.

அதிமுக சார்பாக ஆதாரங்களை சமர்ப்பிப்பதாக கூறப்பட்டது. சபாநாயகர் அப்பாவு விடம் திமுக மற்றும் அதிமுகவினர் பொள்ளாச்சி விவகாரம் தொடர்பான தங்கள் வசம் உள்ள ஆதாரங்களை ஒப்படைத்தனர்.

நேற்று சட்டப்பேரவையில் அவை முன்னவர் துரைமுருகன், பொள்ளாச்சி விவகாரம் தொடர்பான சபாநாயகரின் தீர்ப்பை அறிவிக்க கூறினார்.

அப்போது சபாநாயகர் பொள்ளாச்சி பாலியல் விவகாரம் தொடர்பாக குற்றவாளிகள் மீது கால தாமதமாக நடவடிக்கை எடுக்கப்பட்டது தொடர்பாக முதல்வர் ஸ்டாலின் அளித்த ஆதாராங்களே சரியானது, அது தான் உண்மையும் கூட. இது தான் எனது தீர்ப்பு என்று அறிவித்தார்.

இந்த தீர்ப்பை அதிமுகவினர் எதிர்த்தனர். கொடுக்கப்பட்ட ஆதாரங்கள் படி என தீர்ப்பை வழங்கியுள்ளேன் என்று கூறினார்.

மேலும் அவையை ஒத்தி வைக்கும் தீர்மானத்தை அவை முன்னவர் துரைமுருகன் முன்மொழிந்தார். அது பேரவையின் முடிவுக்கு விடப்பட்டது. பேரவையை தேதி குறிப்பிடப்படாமல் ஒத்திவைக்கும் தீர்மானம் ஒரு மனதாக நிறைவேறியது. இதை தொடர்ந்து சட்டப்பேரவை தேதி குறிப்பிடப்படாமல் ஒத்தி வைக்கப்பட்டது.

## பெரியாரை கொச்சைப்படுத்தும் சீமானுக்கு தக்க பாடம் புகட்ட வேண்டும்: வைகோ காட்டம்

சென்னை, ஜன.12

பெரியாரை கொச்சைப்படுத்தும் சீமானுக்கு தக்க பாடம் புகட்ட வேண்டும் என மதிமுக பொதுச்செயலாளர் வைகோ தெரிவித்துள்ளார்.



இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், "திராவிடர் இயக்கம் குறித்தும், திராவிட இயக்கத் தலைவர்கள் குறித்தும், அவதூறுகளையும், இழிவுகளையும் தொடர்ந்து அள்ளி வீசி வருகிற நாம் தமிழர் கட்சித் தலைவர் சீமான், எல்லை மீறி, வெறி உணர்ச்சியோடு, மனம் போன போக்கில் தந்தை பெரியார் எனும் மாமனிதரை கொச்சைப்படுத்தி பத்திரிகையாளர்களிடம் பேசி உள்ளார்.

தந்தை பெரியாரைப் பற்றி பேசிய கருத்துகளுக்கு ஆதாரம் என்ன? என்று கேட்டால், சிறிதும் பொறுப்பின்றி கோமாளித்தனமாகவும், ஆணவமாகவும், அநாகரிகமாக மேலும் மேலும் நடந்து கொள்கிறார். இதற்கு எதிர்வினையாக கட்சி வேறுபாடு இல்லாமல் தமிழகத் தில் போராட்டங்களும், நீதிமன்றங்களில் முறையீடு செய்வதும் நடந்து வருகின்றன.

சீமானின் பேச்சு சமூகத்தில் பதற்றம் ஏற்படுத்தும் வகையில் உள்ளது. இந்தப் பிரச்சினையில் காவல்துறை விரைந்து நடவடிக்கை எடுத்து அது தொடர்பான அறிக்கையை ஜனவரி 20ஆம் தேதி நீதிமன்றத்தில் ஒப்படைக்க வேண்டும் என்று மதுரை உயர் நீதிமன்றக் கிளை, மதுரை அண்ணாநகர் காவல் நிலையத்துக்கு உத்தரவிட்டுள்ளது.

பொது இடத்தில் அமைதியை குலைத்தல், கலவரத்தைத் தூண்டும் வகையில் பேசுதல் முதலான பிரிவுகளில் சீமான் மீது 60க்கும் அதிகமான வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளது. இவை எதனைப் பற்றியும் சிறிதும் பொருட்படுத்தாமல், அகம்பாவத்துடன் மேலும் மேலும் சீமான் உளறி வருவது வன்மையான கண்டனத்திற்கு உரியதாகும்.

தமிழ்நாட்டை கலவர பூமியாக்கி, சட்டம் ஒழுங்கு சீர்குலைந்து விட்டது என்ற குற்றம் சுமத்துவதற்கான முதல்கட்ட முயற்சியே இது. தமிழ்நாடு அரசு, இதனை முளையிலேயே கிள்ளி எறிய வேண்டும். இவரை நீதிமன்றத்தின் கூண்டிலேற்றி, விசாரித்து, உரிய தண்டனையை உடனடியாக அளிக்க வேண்டும். நாகரிக அரசியலை விரும்புகிற அனைவரும் இத்தகைய 'தீய சக்திகளுக்கு' தக்க பாடம் புகட்டிட தொடர்ந்து அணிதிரள வேண்டும்" எனத் தெரிவித்துள்ளார்.

## "நீட் தேர்வு ரத்து விவகாரத்தில் மக்களை திமுக ஏமாற்றுகிறது"
### தவெக தலைவர் விஜய் சாடல்

சென்னை, ஜன.12

"நீட் தேர்வு ரத்து விவகாரத்தில் மக்களை திமுக அரசு ஏமாற்றுகிறது. எந்தப் பொய்யையும் சொல்லி, தமிழக மக்களை ஏமாற்றிவிடலாம் என்று கனவு காணும் தமிழக ஆட்சியாளர்களின் எண்ணம், இனி வரும் காலங்களில் ஈடேறப் போவதில்லை." என்று தவெக தலைவர் விஜய் தெரிவித்துள்ளார்.



இது தொடர்பாக அவர் தனது சமூகவலைதளப் பக்கத்தில் பகிர்ந்துள்ள பதிவில் கூறியிருப்பதாவது: எத்தனைக் காலம்தான் ஏமாற்றுவார் இந்த நாட்டிலே, சொந்த நாட்டிலே நம் நாட்டிலே.... என்ற பாடல் வரிகள், தற்போதைய தமிழக ஆட்சியாளர்களுக்கு மிகப் பொருத்தமாக உள்ளன.

தேர்தலின்போது போலி வாக்குறுதிகள் அளித்து, மக்களை நம்பவைத்து ஏமாற்ற வேண்டும், தேர்தலில் வெற்றி பெற்ற பிறகு மீண்டும் மக்களை ஏமாற்ற வேண்டும் என்பது தான் தமிழக ஆட்சியாளர்களின் எண்ணமாக உள்ளது. இதற்குப் பல்வேறு சான்றுகள் உள்ளன. அதில் மிக முக்கியமானது, நீட் தேர்வு விவகாரம் சார்ந்தது.

கடந்த 2021 தேர்தல் பிரச்சாரத்தின் போது, நாங்கள் ஆட்சிக்கு வந்தால் நீட் தேர்வைக் கண்டிப்பாக ரத்து செய்வோம், நீட் தேர்வை ரத்து செய்யும் ரகசியம் எங்களுக்குத் தெரியும் என்று பிரச்சாரம் செய்து, தமிழக மக்களை நம்ப வைத்தவர்கள், தற்போதைய ஆட்சியாளர்கள். ஆனால் தற்போது நீட் தேர்வை ரத்து செய்யும் அதிகாரம் ஒன்றிய அரசிற்குத் தான் உள்ளது. மாநில அரசால் ரத்து செய்ய முடியாது என்று தெரிவித்திருப்பது வாக்களித்த மக்களை ஏமாற்றும் செயல் அல்லவா?

எந்தப் பொய்யையும் சொல்லி, தமிழக மக்களை ஏமாற்றி விடலாம் என்று கனவு காணும் தமிழக ஆட்சியாளர்களின் எண்ணம், இனி வரும் காலங்களில் ஈடேறப் போவதில்லை. இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

தமிழக சட்டப்பேரவை கூட்டத் தொடர் இன்று முடிவடைந்துள்ள நிலையில், கூட்டத்தொடரில் முன்வைக்கப்பட்ட பிரச்சினைகள் குறித்தோ, வரவிருக்கும் ஈரோடு கிழக்கு சட்டமன்ற இடைத்தேர்தல் பற்றியோ எதுவுமே தெரிவிக்காமல் பழைய பிரச்சினையை எடுத்து தவெக தலைவர் விஜய் கருத்து செய்திருப்பது விமர்சனத்துக்குள்ளாகியுள்ளது. "விஜய் பனையூரில் இருந்து இருப்பை உறுதி செய்து கொள்ளும் அரசியலை செய்து கொண்டிருக்கிறார்." என்ற விமர்சனங்கள் எழுந்துள்ளன.

## விடுதலை சிறுத்தைகள் கட்சிக்கு தேர்தல் ஆணையம் அங்கீகாரம்: பானையை கைப்பற்றிய திருமாவளவன்

சென்னை, ஜன.12

விடுதலைச் சிறுத்தைகள் கட்சியை அங்கீகரிக்கப்பட்ட மாநில கட்சியாக இந்திய தேர்தல் ஆணையம் நேற்று (ஜனவரி 10) அங்கீகாரம் வழங்கி அதிகாரப்பூர்வமாக அறிவித்துள்ளது.



இது தொடர்பாக விசிக தலைவர் தொல்.திருமாவளவன் நேற்று இரவு வெளியிட்டுள்ள ட்விட்டர் பதிவில், "விடுதலைச் சிறுத்தைகள் கட்சி அங்கீகரிக்கப்பட்ட மாநில கட்சி என்னும் அங்கீகாரத்தை இந்திய தேர்தல் ஆணையம் இன்று (நேற்று) அதிகாரப்பூர்வமாக அறிவித்துள்ளது. விடுதலை சிறுத்தைகள் கட்சிக்கு பானை சின்னத்தை தேர்தல் சின்னமாக அதிகாரப் பூர்வமாக இன்று (நேற்று) இந்திய தேர்தல் ஆணையம் வழங்கியுள்ளது" என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

விடுதலை சிறுத்தைகள் கட்சியை 1990 முதல் அரசியல் இயக்கமாகவே திருமாவளவன் நடத்தி வந்தார். பெரியாரை போல தேர்தல் பாதை திருடர் பாதை என்று கூறி கட்சியாக மாறாமல் இயக்கமாக செயல்பட்டார். 1999ஆம் ஆண்டு ஜிகே மூப்பனார் வலியுறுத்தலின் பேரில் தான் அரசியல் கட்சியாக மாற திருமாவளவன் சம்மதித்தார்.

1999 மக்களவைத் தேர்தல் முதல் தேர்தல் அரசியலில் ஈடுபட்டு வரும் விடுதலை சிறுத்தைகள் கட்சிக்கு 26 ஆண்டுகள் கழித்து தற்போது தான் மாநில கட்சிக்கான அங்கீகாரம் கிடைத்துள்ளது. இதன் மூலம் பானை சின்னத்தை அந்த கட்சி அதிகாரபூர்வமாக பெற்றுள்ளது.

அதிமுக, திமுக, மக்கள் நலக்கூட்டணி என பல்வேறு சூழல்களில் வெவ்வேறு கூட்டணிகளில் இடம்பெற்றிருந்த விடுதலை சிறுத்தைகள் கட்சி இதற்கு முன்னர் கூட்டணி கட்சியினரின் சின்னங்களிலும், சுயேச்சை சின்னங்களிலும் போட்டியிட்டு வந்தது.

2019 மக்களவைத் தேர்தல் முதல் திமுக கூட்டணியில் அங்கம் வகித்து வருகிறது. அந்த தேர்தலில் விசிகவுக்கு ஒதுக்கப்பட்ட இரண்டு தொகுதிகளில் ரவிக்குமார் திமுகவின் உதயசூரியன் சின்னத்திலும், திருமாவளவன் பானை சின்னத்திலும் போட்டியிட்டனர்.

2021 சட்டமன்றத் தேர்தலிலும், 2024 மக்களவைத் தேர்தலிலும் விடுதலை சிறுத்தைகள் கட்சி பானை சின்னத்தில் போட்டியிட்டது. இருப்பினும் கூட்டணி பேச்சுவார்த்தைகளின் போது திமுகவின் உதயசூரியன் சின்னத்தில் போட்டியிடுமாறு திமுக சார்பில் வலியுறுத்தப்பட்டது. ஆனால் திருமாவளவன் அதை உறுதியாக மறுத்துவிட்டார்.

2024 மக்களவைத் தேர்தலில் 8 சதவீத வாக்குகளுக்கு மேல் பெற்ற நிலையில் அங்கீகாரம் பெற்ற மாநில கட்சியாக தேர்தல் ஆணையம் அறிவித்துள் ளது. பானை சின்னம் விசிகவின் சின்னமாக அறிவிக்கப்பட்டு விட்டது.

## ஈரோடு கிழக்கு இடைத்தேர்தல்: திமுக வேட்பாளராக வி.சி.சந்திரகுமார் அறிவிப்பு

சென்னை, ஜன.12

ஈரோடு கிழக்கு இடைத் தேர்தலில் திமுக வேட்பாளராக வி.சி.சந்திரகுமார் அறிவிக்கப்பட்டுள்ளார்.

இது தொடர்பாக திமுக தலைவர் மு.க.ஸ்டாலின் வெளியிட்ட அறிக்கையில், "நடைபெற உள்ள ஈரோடு கிழக்கு சட்டப்பேரவை தொகுதி இடைத்தேர்தலில், காங்கிரஸ் கட்சியுடன் கலந்து பேசியதில், திராவிட முன்னேற்றக் கழகம், இந்த தொகுதியில் போட்டியிடுவதாக முடிவு எடுக்கப்பட்டது. வருகிற 0502 2025 அன்று நடைபெற உள்ள ஈரோடு கிழக்கு சட்டப்பேரவைத் தொகுதி இடைத் தேர்தலில், திமுக தலைமையிலான கூட்டணிக் கட்சிகள் ஆதரவுடன் கழக வேட்பாளராக, வி.சி.சந்திரகுமார் (திமுக கொள்கைப் பரப்பு இணைச் செயலாளர்) போட்டியிடுவார்." எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.



ஈரோடு கிழக்கு தொகுதி காங்கிரஸ் எம்எல்ஏ ஈவிகேஎஸ் இளங்கோவன் மறைவை அடுத்து, பிப்ரவரி 5ம் தேதி இடைத்தேர்தல் அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த தொகுதியில் காங்கிரஸ் சட்டமன்ற உறுப்பினர் இளங்கோவன் மறைவு அடைந்ததையோட்டி இடைத் தேர்தல் வரவிருக்கிறது. இந் நிலையில், ஈரோடு கிழக்கு இடைத்தேர்தலில் திமுக வேட்பாளராக வி.சி.சந்திரகுமார் அறிவிக்கப்பட்டுள்ளார்.

முன்னதாக நேற்று ஈரோடு கிழக்கில் திமுக வேட்பாளர் போட்டியிடுவது உறுதியானது. இது தொடர்பாக தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியின் தலைவர் செல்வப்பெருந்தகை, "2026 சட்டமன்ற பொது தேர்தலுக்கு இன்னும் 10 மாதங்களே உள்ள நிலையில், முதல்வர் மற்றும் இண்டியா கூட்டணியின் தமிழ்நாட்டின் தலைவராக விளங்கி கொண்டிருக்கும் மு.க.ஸ்டாலின், முதல் முறையாக கேட்டுக்கொண்டதற்கு இணங்க அகில இந்திய காங்கிரஸ் தலைமை மற்றும் தமிழ்நாடு காங்கிரஸ் தலைமையின் தீவிர ஆலோசனைக்கு பிறகு நாங்கள் அனைவரும் ஒரு மனதாக ஏற்றுக்கொண்டு இந்திய கூட்டணியின் சார்பாக ஈரோடு கிழக்கு தொகுதியின் இடைத் தேர்தலில் திராவிட முன்னேற்ற கழகத்தின் வேட்பாளர் போட்டியிடுவார் என்று உறுதிசெய்யப்பட்டது. திராவிட முன்னேற்றக் கழகத்தின் வேட்பாளரை பெருவாரியான வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெறச் செய்வோம்." என்று அறிக்கை வெளியிட்டிருந்தது நினைவுகூரத்தக்கது.

## "நாம் தமிழர் கட்சியை கலைத்துவிட்டு சீமான் பாஜகவில் சேர வேண்டும்"
### மாணிக்கம் தாகூர் எம்.பி.

சிவகாசி ஜன.12

சிவகாசி ஆயுதப்படை வளாகத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியில் அமைக்கப்பட்ட சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் மையத்தை விருதுநகர் எம்.பி. மாணிக்கம் தாகூர், மாவட்டக் காவல் கண்காணிப்பாளர் கண்ணன் ஆகியோர்திறந்து வைத்தனர்.

அதன்பின் மாணிக்கம் தாகூர் அளித்த பேட்டியில் கூறியதாவது: முதல்வர் கேட்டுக் கொண்டதற்கு இணங்க அகில இந்திய காங்கிரஸ் தலைமையிடம் ஒப்புதல் பெற்று ஈரோடு கிழக்குத் தொகுதியில் திமுக போட்டியிடும் என தமிழக காங்கிரஸ் தலைவர் அறிக்கை வெளியிட்டுள்ளார். திமுக வேட்பாளர் சந்திரகுமார் வெற்றிக்கு இண்டியா கூட்டணி கட்சியினர் இணைந்து பாடுபடுவோம்.

ஆர்எஸ்எஸ்ஸின் கொள்கைகளை சீமான் பேசி வருகிறார். தமிழகத்தில் பாஜக காலூன்றுவதற்கு சீமான் துணை நிற்கின்றார். இது பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட, சிறுபான்மை மக்களுக்கும், தமிழர்களுக்கும் சீமான் செய்யும் துரோகம். நாம் தமிழர் கட்சியை கலைத்துவிட்டு சீமான் பாஜகவில் சேர வேண்டும்.



அண்ணா பல்கலை. விவகாரத்தை திமுக கூட்டணி கட்சிகள் அனைவரும் கண்டித்துள்ளோம். இந்த விவகாரத்தில் தமிழக அரசு குற்றவாளியை உடனடியாக கைது செய்துள்ளது. இந்த விவகாரத்தில் திமுக கூட்டணி கட்சிகள் போராடவில்லை எனக் கூறுவதுநியாயமற்றது. அண்ணாமலையும் சீமானும் செய்வதை எல்லாம் நாங்கள் செய்ய வேண்டும் என நினைத்தால் அது முடியாது. சட்டப்பேரவையில் காங்கிரஸ் உறுப்பினர்கள் அரசுக்கு எதிராக தொடர்ந்து கேள்விகளை எழுப்பி வருகிறார்கள்.

அரசு நல்லது செய்தால் பாராட்டுவோம், தவறு செய்தால் அதை சுட்டிக் காட்டுவது எங்கள் கடமை. அண்ணா பல்கலை. போன்று தமிழகத்தில் உள்ள கல்வி நிலையங்களில் அசம்பாவிதம் நடைபெறாத வகையில் தமிழக அரசு சட்ட திருத்த மசோதாவை கொண்டு வந்துள்ளது வரவேற்கத்தக்கது." என்று அவர் கூறினார்.

# தாம்பரம் கடப்பேரி ஜிஎஸ்டி ரோடு சந்தானம் முத்துமாரியம்மன் கோவில் அருகில் நலத்திட்ட உதவி



தாம்பரம் ஜன12

செங்கல்பட்டு மேற்கு மாவட்டம் மேற்கு தாம்பரம் கடப்பேரி ஜிஎஸ்டி ரோடு சந்தானம் முத்துமாரியம்மன் கோவில் அருகில் 2025 பேருக்கு ரூபாய் 5 லட்சம் மதிப்பீட்டில் நலத் திட்ட உதவியாக சில்வர் குடம் புடவை பேண்ட் சர்ட் போர்வை பள்ளி மாணவ மாணவிகளுக்கு வாட்டர் பாட்டில் ஆகியவற்றை செங்கல்பட்டு மேற்கு மாவட்ட கழக செயலாளரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான சிட்லபாக்கம் ச.ராஜேந்திரன் வழங்கினார்.

அதனைத் தொடர்ந்து அன்னதானமும் வழங்கப்பட்டன. ஆங்கில புத்தாண்டை முன்னிட்டு தொடர்ச்சியாக 27 வது ஆண்டாக செங்கல்பட்டு மேற்கு மாவட்ட எம்ஜிஆர் மன்ற இணை செயலாளரும் முன்னாள் தாமரம் நகர்மன்ற உறுப்பினருமான தாம்பரம் எம் வேலு ஏற்பாட்டில் ரூபாய் 5 லட்சம் மதிப்பீட்டில் பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டன.

உதவியாக 500 மகளிருக்கு கூட தூய்மை பணியாளர் மற்றும் பார்வையற்றோருக்கு 500 பேருக்கு பேண்ட் சர்ட் புடவை போர்வை ஏழை எளிய தாய்மார்கள் ஆயிரம் பேருக்கு சில்வர் குடம் பள்ளி மாணவ மாணவிகளுக்கு வாட்டர் பாட்டில் 2025 பேருக்கு தினசரி காலனராகியவற்றை செங்கல்பட்டு மேற்கு மாவட்ட கழக செயலாளர் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான சிட்லபாக்கம் சார் ராஜேந்திரன் வழங்கினார். அதனைத் தொடர்ந்து 2500 நபர்களுக்கு மாலை உணவும் வழங்கப்பட்டன இந்நிகழ்ச்சியில் அனைத்து உலக எம்ஜிஆர் மன்ற தலைவர் முன்னாள் அமைச்சர் டி.கே.எம் சின்னையா, தாம்பரம் மத்திய பகுதிகழக செயலாளர் எல்லார் செழியன், கிழக்கு பகுதி கழக செயலாளர் எம்.கூத்தன், மேற்கு பகுதி கழக செயலாளர் முன்னாள் நகர மன்ற துணைத் தலைவர் ஏ.கோபிநாதன், மாவட்ட கழகப் பொருளாளர் பி.கே.பரசுராமன், சிட்லபாக்கம் செம்பாக்கம் பகுதி கழக செயலாளர் இரா. மோகன், மாவட்ட அம்மா பேரவை செயலாளர் எம்.ஜி.கே. கோபி கண்ணன், மாமன்ற உறுப்பினர்கள் சி.சாய் கணேஷ், ஸ்டார் பிரபா மற்றும் நிர்வாகிகள் கே.கோபால், எஸ்.ஜேசுராஜ், பி.ராஜா, தீபன், வி.கே.பி.நாராயணன், ஏ.கோபி, பாலாஜி, எஸ்.பி.விஜயபாலன் உட்பட மாவட்டம் பகுதி வட்ட கழக நிர்வாகிகள் உட்பட திரளான கழகத்தினர் கலந்து கொண்டனர்.



கன்னியாகுமரி மாவட் டம், நாகர்கோவில் மாநக ராட்சிக்குட்பட்ட அண்ணா பேருந்து நிலையத்தில் தமிழ் நாடு அரசின் சாதனைகள் மற்றும் சிறப்பு திட்டங்கள் குறித்து பொதுமக்கள் அறிந்து கொண்டு பயன்பெறும் வகையில் மாவட்ட செய்தி மக்கள் தொடர்புத்துறையின் சார்பில் புகைப்படக்கண்காட்சி நடைபெற்றது.

# தென்காசி பாதயாத்திரை பக்தர்களுக்காக காவல்துறை சார்பாக விபத்தில்லா பயணத்திற்கு சிறப்பு ஏற்பாடு



தென்காசி ஜன12

தென்காசி மாவட்டத்தில் பாதயாத்திரை பக்தர்களுக்காக காவல்துறை சார்பாக விபத்தில்லா பயணத்திற்கு சிறப்பு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

தென்காசி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் எஸ். அரவிந்த் அவர்கள் அறிவுறுத்தலின் படி மாவட்டம் முழுவதும் திருச்செந்தூர் மற்றும் சபரிமலை பாதயாத்திரை செல்லும் பக்தர்களுக்கு பாதுகாப்பு நலன் கருதி இரவில் செல்லும் பக்தர்களை வாகன ஓட்டிகளுக்கு அடையாளம் தெரியும் வகையில் reflecting ஸ்டிக்கர் பக்தர்கள் கொண்டு வரும் பையில் ஒட்டி சாலையின் ஓரமாக நடந்து செல்லவும் விபத்தில்லா பயணம் செய்ய அறிவுறுத்தப்பட்டது அதில் ஒரு பகுதியாக தென்காசி துணை காவல் கண்காணிப்பாளர் தமிழ் இனியன் மேற்பார்வையில் செங்கோட்டை வழியாக செல்லும் 50 பக்தர்களுக்கு செங்கோட்டை காவல் ஆய்வாளர் பாலமுருகன் தலைமையில் reflecting ஸ்டிக்கர் ஒட்டி அறிவுரை வழங்கி அனுப்பப்பட்டது.

நடைபாதை பக்தர்களின் நலன் கருதி தென்காசி மாவட்ட காவல்துறை முன்வந்து இந்த முயற்சியில் ஈடுபடுவது பொதுமக்களிடையே பெரும் வரவேற்பை பெற்று வருகின்றது.

# யூ ஜி சி யின் புதிய விதிமுறைகளை ரத்து செய்யக்கோரி அனைத்திந்திய மாணவர் கூட்டமைப்பு சார்பில் ஆர்ப்பாட்டம்




சென்னை, ஜன.12

யூ ஜி சி யின் (UGC) புதிய விதிமுறைகளை ரத்து செய்யக்கோரி ஒன்றிய அரசை கண்டித்து அனைத்திந்திய மாணவர் கூட்டமைப்பு சார்பில் கடந்த வெள்ளிக்கிழமை காலை சென்னை வள்ளுவர் கோட்டம் அருகில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

இந்த நிகழ்ச்சியில் கழக மாணவரணி செயலாளர் காஞ்சிபுரம் சட்டமன்ற உறுப்பினர் எழில ரசன் கலந்துகொண்டு கண்டன உரை ஆற்றினார். மேலும் மாநில இணை செயலாளர்கள் துணை செயலாளர்கள் காஞ்சி வடக்கு மாவட்ட மாணவரணி சார்பில் மாவட்ட மாணவரணி அமைப்பாளர் பேராசிரியர் எல் பிரபு அவர்களின் தலைமையில் 100க்கும் மேற்பட்டோர் கண்டன ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டனர். இதில் காஞ்சி வடக்கு மாவட்ட மாணவர் அணி துணை அமைப்பாளர்கள் கலாநிதி குணாளன், விக்கி (எ) விக்னேஸ்வரன், வே.சங்கீதா மற்றும் ஒன்றிய பகுதி நகர பேரூர் கழக மாணவரணி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

# எஸ்.ஆர்.எம். தமிழ்ப்பேராயம் நடத்திய மிகப் பிரம்மாண்டமான பொங்கல் விழா



மதுரை, ஜன 12

எஸ்.ஆர்.எம். பல்கலைக் கழகத் தமிழ்ப்பேராயம் ஆண்டுதோறும் பொங்கல் விழாவை மிகச் சிறப்பாகக் கொண்டாடி வருகின்றது. அதன் தொடர்ச்சியாக பொங்கல் விழா ரூ 2025 காட்டாங்குளத்தூரில் அமைந்துள்ள எஸ்.ஆர்.எம். கல்வி நிறுவனத்தில் கொண்டாடப்பட்டது.

எஸ்.ஆர்.எம். பல்கலைக்கழக நிறுவன வேந்தரும், தமிழ்ப் பேராயப் புரவலருமான மாண்பமை வேந்தர் அவர்கள் தலைமையேற்று வாழ்த்துரை வழங்கினார். எஸ்.ஆர்.எம். கல்வி நிறுவன துணைவேந்தர் பேரா. செ. முத்தமிழ்ச்செல்வன் அவர்கள் முன்னிலை வகித்தார். பத்மபிரியா ரவி மற்றும் மணி மங்கை சத்தியநாராயணன் ஆகியோர் விழாவில் சிறப்பு விருந்தினர்களாகப் பங்கேற்றனர்.

தமிழர்களின் கலைகள், மரபு, பண்பாடு ஆகியவற்றின் பெருமைகளைப் பறைசாற்றும் வகையில் நடைபெற்ற பொங்கல் விழாவில் ஆசிரியர்கள், ஆசிரியரல்லாத பணியாளர்கள், மாணவர்கள் என 15,000 பேர் பங்கேற்றனர்.

பொங்கல் விழாவையொட்டி கவிதை, ஓவியம், நடனம், பாட்டு, பேச்சு எனப் பல்வேறு போட்டிகள் ஆசிரியர்கள், ஆசிரியரல்லாத பணியாளர்களுக்கும் மற்றும் மாணவர்களுக்கும் தனித்தனியாக நடைபெற்றன. போட்டியில் ஏராளமானோர் பங்கேற்றுப் பரிசுகள் வென்றனர்.

மயிலாட்டம், ஒயிலாட்டம், பறையிசை, காவடியாட்டம், பொய்க்கால் குதிரையாட்டம், மாடாட்டம் உள்ளிட்ட தமிழர்களின் பாரம்பரிய கலைகள் மற்றும் மாணவர்களின் கலை நிகழ்ச்சிகளும் நிகழ்த்தப்பட்டன.

இவ்விழாவினை முன்னிட்டு பல்கலைக்கழகப் பேராசிரியர்கள், ஆசிரியரல்லாத பணியாளர்கள் மாணவர்கள் அனைவருக்கும் மத்திய விருந்து ஏற்பாடு செய்யப்பட்டது.

இறுதியாகத் தமிழ்ப்பேராயத் தலைவர் பேரா. கரு. நாகராசன் நன்றியுரை ஆற்றினார்.

புத்தாண்டு பொங்கலை முன்னிட்டு தாம்பரம் கடப்பேரியில் தாம்பரம் எம் வேலூர் ஏற்பாட்டில் நிகழ்ச்சி 2025 பேருக்கு ரூபாய் 5 லட்சம் மதிப்பில் நலத்திட்ட உதவி ரூபாய் 2500 பேருக்கு அன்னதானம் செங்கல்பட்டு மேற்கு மாவட்ட கழக செயலாளர் சிட்லபாக்கம் ச. ராஜேந்திரன் வழங்கினார்.

# தமிழக வெற்றி கழகம் தாம்பரம் மேற்கு பகுதியில் 1000 நபர்களுக்கு பொங்கல் தொகுப்பு வழங்கும் நிகழ்ச்சி







பொழிச்சலூர் ஜன12

செங்கல்பட்டு மேற்கு மாவட்ட தமிழக வெற்றி கழகம் தாம்பரம் மேற்கு பகுதி 51 வது வார்டு சார்பில் 1000 நபர்களுக்கு பொங்கல் தொகுப்பு வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது.

தமிழக வெற்றி கழகம் செங்கல்பட்டு மேற்கு மாவட்டம் தாம்பரம் மேற்கு பகுதி 51வது வார்டு சார்பில் தைத்திரு நாளை முன்னிட்டு 1000நபர்களுக்கு பொங்கல் தொகுப்பு பை வழங்கும் நிகழ்ச்சி மாவட்ட பொருளாளர் விஜய் தியாகு தலைமையில் மணிகண்டன், கென்னடி பாலு, சரவணன், விஜய், மணி, ஆகியோர் ஏற்பாட்டில் மேற்கு தாம்பரம் ரமேஷ் நகர் ஆட்டோ ஸ்டாண்டில் நிகழ்ச்சி நடைபெற்றது.

இதில் சிறப்பு அழைப்பாளராக மாவட்ட தலைவர் மின்னல் குமார், மாவட்ட தொண்டரணி தலைவர் கில்லி சரத்குமார், மாவட்ட இளைஞரணி தலைவர் தினேஷ், மாவட்டம் மாணவரணி தலைவர் பிரவீன் குமார், மாவட்ட வர்த்தக அணி தலைவர் செந்தில்குமார் ஆகியோர் பங்கேற்று சிறப்புரையாற்றி பின்னர் பொதுமக்களுக்கு பொங்கல் வாழ்த்துக்கள் தெரிவித்து பொங்கல் தொகுப்பினை வழங்கினார் உடன் மாவட்ட செயலாளர் அறிவானந்தன், சங்கர் பாஸ்கர், கில்லி, கே.விஜய், தாம்பரம் மேற்கு பகுதி நிர்வாகிகள் ரூபன், லோகேஷ், குணா, சர்குணம், ரமேஷ், சங்கர் மற்றும் மாவட்டம் பகுதி அணி நிர்வாகிகள் மகளிர் அணி நிர்வாகிகள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

# போளூர் கட்டிப்பூண்டி ஊராட்சியில் தெருசாலையில் மின்விளக்கு அமைக்க பொதுமக்கள் மாவட்ட ஆட்சியருக்கு கோரிக்கை



திருவண்ணாமலை, ஜன.12

திருவண்ணாமலை மாவட்டம், போளூர் தாலுகா, போளூர் அடுத்த கட்டிப்பூண்டி ஊராட்சி, கட்டிப்பூண்டி கிராமத்தில் கொள்ளைமேடு, ஆத்துவம்பாடி டு போளூர் செல்லும் நெடுஞ்சாலையில் ஏற்கனவே இருந்த தெரு மின் விளக்கு, பத்து ஆண்டு காலமாக அமைக்கப்பட்டிருந்த நிலையில், சாலை போக்குவரத்துக்கும் பல்வேறு திருட்டு சம்பவங்கள், சாலையில் மின்விளக்கு இன்றி இருளில் மது பிரியர்கள் அதிவேகமாக வாகனங்களை ஓட்டுவதும், இச்சாலையில் பள்ளி கல்லூரி மாணவர்கள், விவசாயிகள் மற்றும் அதிக பொதுமக்கள் நடமாட்டம் அதிகரிப்பு, எதிரெதிரே ஆம்புலன்ஸ்கள் வந்தால் ஒதுங்க கூட இடமில்லை பெரிய வாகனங்கள் ஒதுங்குவதற்கு ஏதுவாகவும், சாலையில் கடக்கும் போது பல்வேறு விபத்துக்கள் ஏற்படும் அவல நிலை இருந்த நிலையில் இந்த மின் விளக்கு வெளிச்சத்தால் பல் வேறு வாகன விபத்துக்கள் இல்லாமல் இருந்து வந்தது குறிப்பிடத்தக்கது. இதனை சமீபத்தில் ஓராண்டு கால மாக ஊராட்சி நிர்வாகம் சுரேஷ் மற்றும் ஊராட்சி மன்றத் தலைவர் ரேகா சுதாகர் பராமரிக்கப்படாமல் பொதுமக்கள் நலனின் கவனம் செலுத்தாமல், எல்லாம் செய்கிறார்... எல்லாம் செய்கிறார்.... என மக்களுக்கு விளம்பரத்தை ஏற்படுத்தி பல்வேறு பணிகளில் தரமற்ற பணிகளை மேற்கொண்டு, பல் வேறு ஊழல்களில் ஈடுபடுவதும், போலி பில்களில் பணம் எடுப்பதுமாகவே மக்களுக்கு நல்லது செய்கிறார் என்று போலி பிம்பத்தையே உருவாக்கி மக்களை நம்ப வைத்து காலத்தை கழித்து வருகின்றனர், மக்களும் நம்புகின்றனர் நம்பிய மக்களுக்கு மின்விளக்கு வசதி இல்லை, இந்த மின் விளக்கை அமைத்து தர பலமுறை பொதுமக்கள் மற்றும் சமூக ஆர்வலர்கள் கோரிக்கை வைத்தும் மின் விளக்கு பொருத்தாமல் அலட்சியமாக செயல்பட்டு வருவதை பொதுமக்கள் வேதனை தெரிவித்து வருகின்றனர்.

இந்த தெரு சாலையில் பொதுமக்களின் நலன் கருதி இரவில் 90W LED தரம் வாய்ந்த, நல்லா மிகுந்த வெளிச்சம் தரக்கூடிய மின்விளக்கு ஆன் ஆப் சுவிட்ச் உடன் மின்விளக்கு அமைத்து பொதுமக்களின் பாதுகாப்பையும் மற்றும் பல மது பிரியர்கள் அதிவேகத்தில் வாகனம் ஓட்டி விபத்துக்குள்ளாக்குவதை தடுக்க, மின்விளக்கு அமைத்து வெளிச்சம் ஏற்படுத்துமாறு சம்பந்தப்பட்ட துறை அதிகாரிகளுக்கு மாவட்ட ஆட்சியர் உத்தரவிட்டு மின்விளக்கு அமைக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென பொதுமக்கள் மற்றும் சமூக ஆர்வலர்கள் கோரிக்கை வைத்துள்ளனர்.

# மதுரையில் ஜோயாலுக்காஸ் வைர நகை கண்காட்சி



மதுரை ஜன 12

உலகின் ஃபேவரிட் ஜுவல்லர் ஜோயாலுக்காஸ் மிகப் பெரிய வைர நகை கண்காட்சியை மதுரையில் 10 முதல் 26 ஜனவரி 2025 வரை நடத்துகிறது.

அசாத்தியமான இந்த கண்காட்சி மிகப் பெரிய ஜுவல்லரி கலெக்ஷன்களை, இந்த ஆண்டின் அற்புதமான டிசைன்களை வைரம் மற்றும் பிரஸ்ஸியஸ் ஜுவல்லரிகளில் சமர்ப்பிக்கிறது. அழகான கலை வடிவம் கொண்ட ஜுவல்லரிகளை கொண்டாடும் ரசனை மிகுந்த நபர்களுக்காக, வாழ்வில் ஒரு முறை நிகழும் வாய்ப்பாக, உலக தரத்திலான கலை நுட்பத்துடன் கூடிய ஜுவல்லரிகளின் இந்த கண்காட்சிக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

ஜோயாலுக்காஸ் குழுமத்தின் தலைவர் மற்றும் நிர்வாக இயக்குனர் ஜோய் ஆலுக்காஸ் தெரிவித்தார். மதுரை மக்களுக்கு கொண்டு வருவதில் நாங்கள் மிகுந்த பெருமை கொள்கிறோம். பாரம்பரியம் மற்றும் நவீனம் இரண்டும் இணையும் அழகான இந்த நகைகள் உங்கள் பரம்பரையின் புதிய பொக்கிஷ வரவுகளில் ஒன்றாக மலர்வது உறுதி என்றும் தெரிவித்தார்.

கண்காட்சிக்கு வரும் பொது மக்கள் தலைசிறந்த வைர ஆபரணங்கள் மற்றும் பிரஸ்ஸியஸ் கற்களின் ஆபரணங்களை அட்டகாசமான டிசைன்களில் நுட்பமான கலை வடிவங்களில் கண்டு மகிழலாம்.

இந்த கண்காட்சியை இன்னும் விஷேசமாக மாற்றிட ரூபாய் ஒரு லட்சம் மற்றும் அதற்கு மேல் வைர ஆபரணங்கள் வாங்கும் வாடிக்கையாளர்களுக்கு ஜோயாலுக்காஸ் ஒரு கிராம் தங்க நாணயத்தை இலவசமாக வழங்குகிறது.

உங்கள் உணர்வை வெளிப்படுத்தும் ஒரு அடையாளமாக அல்லது தலைமுறைகள் தாண்டி காலத்தை கடந்த பொக்கிஷமாக ஒரு வைர ஆபரணத்தை நீங்கள் வாங்க விரும்பினால் ஜோயாலுக்காஸின் இந்த ஜுவல்லரி கண்காட்சிதான் சரியான சந்தர்ப்பம்.

# இராமநாதபுரம் மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை சார்பில் சமத்துவ பொங்கல் விழா விளையாட்டு போட்டி



இராமநாதபுரம், ஜன 12

இராமநாதபுத்தில் உள்ள மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை அலுவலகத்தில் தமிழர் திருநாளை முன்னிட்டு சமத்துவ பொங்கல் விழா மீன்வளத்துறை துணை இயக்குநர் பிரபாவதி தலைமையில் நடைபெற்றது.

இவ்விழாவிற்கு இராமநாதபுரம் மாவட்ட மீன்வளத் துறை உதவி இயக்குனர்கள், கோபிநாத், ஜெயக்குமார் ஆகியோர் முன்னிலை வகுத்தனர். அலுவலகத்தின் முன் பகுதியில் தமிழர் திருநாளாம் தைபெங்கல் திருநாளை முன்னிட்டு செங்கரும்புகள் கட்டி வைத்து சமத்துவ பொங்கலிட்டு பால் பொங்கியது போல் அனைவரது வாழ்விலும் மகிழ்ச்சி பொங்கட்டும் என கூறி ஒருவருக்கு ஒருவர் தங்களின் வாழ்த்துக்களை கூறிக் கொண்டு சிறப்பாக பொங்கல் விழா கொண்டாடினர். அதன் தொடர்ச்சியாக தமிழர்களின் பாரம்பரிய விளையாட்டுகளான உறி அடித்தல், டேபில் ஸ்பூன், லக்கி கார்னர் உள்ளிட்ட விளையாட்டு போட்டிகள் நடத்தப்பட்டது. போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு மீன்வளம், மற்றும் மீனவர் நலத் துறை சார்பாக பரிசுகள் வழங்கப் பட்டது. இந்நிகழ்வில் ஆய்வாளர்கள், சரவணன், அபுதாஹிர், சார்பு ஆய்வளர்கள் மற்றும் சாகர் மித்ரா அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# கல்லல் சாந்திராணி பள்ளியில் அறிவியல் கண்காட்சி
















கல்லல் ஜன 12

சிவகங்கை மாவட்டம் கல்லல் சாந்தராணி பதின்ம மேல் நிலைப் பள்ளியில் அறிவியல் கண்காட்சி நடை பெற்றது.

பள்ளி முதல்வர் அருட் சகோதரி சுதா தலைமை தாங்கி கண்காட்சியை தொடங்கி வைத்தார். கல்லல் முருகப்பா மேல்நிலைப் பள்ளி பட்டதாரி ஆசிரியர் பிரபு மற்றும் தவத்திரு குன்றக்குடி அடிகளார் மேல் நிலைப்பள்ளி முதுகலை ஆசிரியை முனைவர் தாட்சாயினி நடுவர்களாக கலந்து கொண்டு மாணவர்கள் சமர்ப்பித்த அனைத்து காட்சிப் பொருள்களையும் மதிப்பீடு செய்தனர். துணை முதல்வர் அருட்சகோதரி ரெக்ஸி வாழ்த்துரை வழங்கினார்.

மொத்தம் 190 பொருட்கள் காட்சிப்படுத்தப்பட்டன. இதில் கேஜி பிரிவில் 41, ஒன்றாம் முதல் மூன்றாம் வகுப்பு வரை உள்ள பிரிவில் 45, நான்கு முதல் ஆறாம் வகுப்பு பிரிவில் 47, ஏழு முதல் 9ஆம் வகுப்பு வரை பிரிவில் 82 அறிவியல் மாதிரி பொருட்கள் காட்சிப்படுத் தப்பட்டிருந்தன.

ஒவ்வொரு பிரிவிலும் முதல் மூன்று இடங்களை பிடித்த மாணவ மாணவிகளுக்கு பரிசும், சான்றிதழும் வழங்கப் பட்டது. கேஜி கிருத்திக், ஆருத்ரா நாச்சியார், ஹரி சரண், முதல் வகுப்பு முதல் மூன்றாம் மூன்றாம் வகுப்பு வரை உள்ள பிரிவில் ரிதிக்சன், முகில் பிரவீன், ரோகர், நான்கு முதல் ஆறாம் வகுப்பு வரை உள்ள பிரிவில் ஹர்ஷா ஸ்ரீ, ஜோயல் பிளசன்,: நிதிசன் ஏழு முதல் ஒன்பதாம் வகுப்பு வரை உள்ள பிரிவில் சபிக ரக் ஷனா, ரக்சனா, அபூர்வா, அக்ஷயா, புவனிஷ்கா, விவேகா ஸ்ரீ ஆகியோர் பரிசுகளைப் பெற்றனர். அறிவியல் கண்காட்சிக்கு வேண்டிய ஏற்பாடுகளை அறிவியல் ஆசிரி யர்கள் ஏற்பாடு செய்தனர். மாணவர்களை அறிவின் கண்காட்சிக்கு தயாராகும் வண்ணம் வகுப்பு ஆசிரியர்கள் கடந்த பத்து நாட்களாக முனைப் புடன் செயல்பட்டனர்

இதே நாளில் இப்பள்ளியில் பொங்கல் விழாவும் கொண்டாடப்பட்டது. கீழப்பூங்குடி ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளியின் தலைமை ஆசிரியை வனிதா விழாவிற்கு தலைமை தாங்கினார்.

ஆசிரியை ஜெனிபர் வரவேற்புரை வழங்கினார். தமிழ் துறையைச் சேர்ந்த ஆசிரியர்கள் இதற்கு வேண்டிய ஏற்பாடுகளை செய்தனர். விழாவின் தொடக்கமாக மாணவ மாணவிகளின் பல்சுவை கலை நிகழ்ச்சிகள் இடம் பெற்றது. இவ்விழாவில் தமிழ் ஆசிரியை ஜாக்குலின் நன்றியுரை வழங் கினார். திரளான மாணவர்களும் பெற்றோர்களும் உற்சாகத்துடன் இப் பொங்கல் விழாவில் கலந்து கொண்டனர்.

# திண்டுக்கலில் சுந்தரம் பைனான்ஸ் நடத்திய டிராக்டர்களுக்கான பொங்கல் அழகு போட்டி



திண்டுக்கல், ஜன 12

இந்தியாவில் அதிகம் மதிக்கப்படும் வங்கிசாரா நிதி நிறுவனங்களுள் முதன்மை வகிக்கும் சுந்தரம் பைனான்ஸ் லிமிடெட், தமிழ்நாட்டின் பாரம்பரியமிக்க முதன்மை பண்டிகையான பொங்கல் திருநாளையொட்டி வர்த்தக வாகனங்களுக்கான 2025 பொங்கல் அழகு போட்டியை திண்டுக்கல் நகரில் இன்று சிறப்பாக நடத்தியது.

ஆட்டோமோட்டிவ் வாகனங் களுக்கான கடன் வழங்கல், பொது காப்பீடு, வீட்டுக் கடன்கள் மற்றும் சொத்து மேலாண்மை ஆகிய பிரிவுகளில் தீவிரமாக ஈடுபட்டு வரும் இந்நிறுவனம், வாடிக்கையாளர் நல்லுறவை வலுப்படுத்துவதற்கான மிக நன்றாக பராமரிக்கப்படுகிற, தூய்மையான மற்றும் சிறப்பாக அலங்கரிக்கப்பட்ட டிரக்கை தேர்வு செய்து கவுரவிக்கிற போட்டியாக இது நடத்தப்பட்டது.

இந்நிகழ்வில் உரிமையாளர்கள், போக்குவரத்து மேலாளர்கள் மற்றும் வாகன ஓட்டுநர்கள் உட்பட 30 பங்கேற்பாளர்கள் கலந்து கொண்டனர். சுந்தரம் சங்கமம் பெயரில் நடத்தப்பட்ட அழகு போட்டியில் போட்டியில் 12 டிராக்டர்கள் பங்கேற்றன. முதன்மையான மூன்று டிராக்டர்களை தேர்வு செய்தனர். சிறப்பாக பராமரிக்கப்பட்ட, உரிமையாளர்களுக்கு சுந்தரம் பைனான்ஸ் வழங்கிய பரிசுகள் விநியோகிக்கப்பட்டன. இந்நிகழ்வின் போது சுந்தரம் பைனான்ஸ்ன் டிராக்டர்க்கான நிதியுதவி நடைமுறை குறித்தும் மற்றும் முக்கியமான காமதேனு செயல்திட்டம் குறித்து நிறுவன அதிகாரிகள் விளக்கிக் கூறினர்.

சுந்தரம் பைனான்ஸ் நிறுவனத்தைச் சேர்ந்த ஹரிஹரன், நிறுவனம் வழங்கும் சிறப்பான காப்பீடு திட்டங்கள் குறித்து விளக்கமளித்தார். இந்நிகழ்வில் உரையாற்றிய SHFL மேலாளர் சிவக்குமார் வீட்டு கடன் திட்டங்கள் பற்றிய தகவல்களை தெளிவாகவும், எளிமையாகவும் எடுத்துரைத்தார். இப் போட்டியில் வெற்றிவாகை சூடியவர்களுக்கு சிறப்பான பரிசுகள் வழங்கப்பட்டன. அத்துடன், போட்டியில் பங்கேற்ற அனைவருக்கும் நினைவு பரிசுகள் வழங்கப்பட்டன.

மகிழ்ச்சியும், உற்சாகமும் நிறைந்த சூழலில் வாடிக்கை யாளர்களிடம் கலந்துரையாடி நல்லுறவை வளர்ப்பதற்காக பொங்கலையொட்டி இந்நிகழ்வு நடத்தப்பட்டது. அத்துடன், கேபின் அமைவிடம் உட்பட தங்களது வாகனங்களை பாதுகாப்புடனும், தூய்மையாகவும் உயர்தரநிலைகளில் பராமரிக்கிற டிராக்டர் உரிமையாளர்களை அங்கீகரித்து கவுரவிப்பதும் இந்நிகழ்வின் நோக்கமாகும். தங்களது டிராக்டர்களை அழகாக அலங்கரித்து தனித்துவ அடையாளத்தோடு போட்டியில் விவசாயிகள் கலந்து கொண்டது இந்நிகழ்வின் வெற்றிக்கு எடுத்துக்காட்டாகும்.

ஜனவரி 1ம் தேதி முதல் 31ம் தேதி வரை கடைபிடிக்கப்படும் "தேசிய சாலை பாதுகாப்பு மாதம்" 2025 நிகழ்வையொட்டி தமிழ்நாடு மாநிலத்தின் பல் வேறு அமைவிடங்களிலும் "சுந்தரம் சங்கமம்" நிகழ்வு நடத்தப்படுகிறது.

# தேனி வடக்கு மாவட்ட திமுக அயலக அணி சார்பில் தூய்மை பணியாளர்களுக்கு பாராட்டு அறுசுவை விருந்து



தேனி ஜன 12

தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பிறந்தநாள் விழாவை முன்னிட்டு தேனி வடக்கு மாவட்ட அயலக அணி சார்பில் தூய்மை பணியாளர்களுக்கு பாராட்டு மற்றும் அறுசுவை விருந்து வழங்கும் விழா தேனி வசந்தம் மஹாலில் தேனி வடக்கு மாவட்ட அயலக அணி அமைப்பாளர் ராஜன் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்விற்கு சிறப்பு விருந்தினராக கலந்து கொண்ட தேனி நாடாளுமன்ற உறுப்பினரும்,தேனி வடக்கு மாவட்ட செயலாளருமான தங்க தமிழ்ச் செல்வன் கலந்து கொண்டு பேசுகையில் "கொரோனா நோய் தொற்று காலத்தில் தூய்மையாளர்களின் பணி இன்றியமையாதது.தூய்மை பணியாளர்களை தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் இவர்கள் தூய்மை பணியாளர்கள் அல்ல,தூய்மை பாது காவலர்கள் என்று அழைத் தார்.அதேபோல் தமிழ்நாடு வரலாற்றில் எந்த ஒரு முதலமைச்சரும் தூய்மை பாதுகாவலர்களுடன் அமர்ந்து சாப்பிட்டதில்லை.ஆனால் நம்முடைய முதல்வர் அவர்களோடு அமர்ந்து சாப்பிட்டதை நினைத்து பெருமிதம் கொண்டார்.எனவே தூய்மை பாது காவலர்களுக்கு எப்போதும் திமுக துணை நிற்கும் "என்று பேசினார்.

இந்நிகழ்வில் தேனி உன் வடக்கு மாவட்ட அவை தலைவர் செல்ல பாண்டியன், தேனி நகர செயலாளர் நாராயண பாண்டியன்,தேனி நகர்மன்ற தலைவர் ரேணுப்பிரியா பால முருகன்,போடி நகர்மன்ற தலைவர் ராஜராஜேஸ்வரி சங்கர்,பெரியகுளம் நகர் கழக செயலாளர் முகமது இலியாஸ்,பெரியகுளம் ஒன்றிய முன்னாள் சேர்மன் தங்கவேல்,தாமரைக்குளம் பேரூராட்சி தலைவர் பால் பாண்டியன்,தேனி வடக்கு மாவட்ட செயலாளர் அணி துணை அமைப்பாளர்கள் முகமது ரபீக்,பாசித் ரஹ்மான், மனோஜ் குமார்,கண்ணன், சிராஜுதீன், மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் கழக நிர்வாகிகள், சார்பு அணி, தன்னார்வ தொண்டு நிறுவன அமைப்பினர் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

தேனி வடக்கு மாவட்ட திமுக அயலக அணி சார்பில் தூய்மை பணியாளர்களுக்கு நன்றி தெரிவிக்கும் விதமாக அவர்கள் மேல் பூ மழை பொழிந்தனர்.

நிகழ்ச்சியின் முடிவில் அனைவருக்கும் சிக்கன் கிரேவி, மட்டன் குழம்பு,மீன் பொரியல், முட்டை கிரேவி, பாதாம் பாயாசம், பச்சடி உள்ளிட்ட அறுசுவை உணவு வழங்கப்பட்டது.








சிவகங்கை மாவட்டம் மானாமதுரை அரசகுளம் கிராமத்தில் முத்துக்குமார் என்பவருக்கு சொந்தமான இடத்தில் சட்டவிரோதமாக பட்டாசு ஆலையில் வெடி தயாரிக்கும் பணி நடைபெற்று வந்தாக புகார் வந்துள்ளது மானாமதுரை காவல் துணை கண்காணிப்பாளர் நிரேஷ், ஆய்வாளர், கிராம நிர்வாக அலுவலர் தலைமையில் சோதனை செய்ததில் வெடி பொருட்கள் தயாரிப்பு நிலையில் காணப்பட்டது உடனடியாக பட்டாசு ஆலைக்கு சீல் வைக்கப்பட்டது...



தென்காசி மாவட்டம் மேல கடையநல்லூர் நகராட்சி துவக்கப்பள்ளியில் சமத்துவ பொங்கல் விழா தலைமையாசியர் மணிமாறன் தலைமையில் வட்டார கல்வி அலுவலர்கள் மகேஸ்வரி, முத்துலிங்கம் பள்ளி மேலாண்மைக் குழு தலைவர் பானுமதி ஆகியோர் முன்னிலை வகித்தனர். விழாவிற்கு சிறப்பு விருந்தினராக நகர்மன்ற தலைவர் ஹபீப்புர் ரஹ்மான் விழாவில் கலந்து கொண்டு பள்ளி குழந்தைகளுக்கு சர்க்கரை பொங்கல் வழங்கி சிறப்பித்தார். நகர்மன்ற உறுப்பினர்கள் ராமகிருஷ்ணன், மாரி மற்றும் மேலாண்மைக்குழு கல்வியாளர் தேவராஜ், பள்ளி முன்னாள் மாணவர் பிரதிநிதி ஹரிகரன், ஆயிஷாபானு, சாந்தி, புரவலர் முருகானந்தம் ஆகியோர் கலந்து கொண்டனர். இல்லம் தேடி கல்வி தன்னார்வலர் மகேஸ் நன்றி கூறினார்.

# கூர்மையான ஆயுதத்துடன் வீடியோ எடுத்து சமூக வலைதளங்களில் பதிவு செய்த பாஜக இளைஞரணி ஒன்றிய தலைவர் மீது வழக்குப்பதிவு







பழனி ஜன 12

திண்டுக்கல் மாவட்டம் பழனி அருகே உள்ளது நெய்க்காரப்பட்டி பேரூராட்சி. இங்கு உள்ள பெருமாள் கோவில் வீதியில் வசித்து வருபவர் ராஜீவ் காந்தி. (33) இவர் பாஜக இளைஞர் அணி ஒன்றிய தலைவராக பொறுப்பு வகித்து வருகிறார். இவர் கடந்த இரண்டு நாட்களுக்கு முன்பு தனது வீட்டில் இருந்தபடியே கூர்மையான கத்தியை வைத்து பின்னணி பாடல் இசையுடன் வீடியோ எடுத்து தனது வாட்ஸ் அப், இன்ஸ்டாகிராம் மற்றும் முகநூல் உள்ளிட்ட சமூக வலைதளங்களில் பதிவிட்டிருந்தார்.

இது சமூக வலைதளங்களில் வைரலாக பரவியது. இதுகுறித்து தகவல் அறிந்த காவல்துறை துணை கண்காணிப்பாளர் தனஜெயன் அதிரடி உத்தரவின் பேரில் பழனி தாலுகா காவல் ஆய்வாளர் தங்கம் முனி. சார்பு ஆய்வாளர் தியாகராஜன் சந்திரன் மற்றும் காவலர்கள் சமூக வலைதளங்களில் பரவிய வீடியோவின் அடிப்படையில் பாஜக இளைஞரணி ஒன்றிய தலைவர் ராஜீவ் காந்தி மீது வழக்கு பதிவு செய்தனர்.

தொடர்ந்து அவரை கைது செய்த போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர். பாஜக இளைஞரணியின் ஒன்றிய செயலாளரான ராஜிவ்காந்தி, பழனியில் கடந்த வாரம் பாஜக மாவட்ட தலைவர் கனகராஜ் கைது செய்யப்பட்டதை கண்டித்து நடந்த போராட்டத்தின் போது தனி ஆளாக பேருந்தை மறித்து போராட்டத்தில் ஈடுபட்டவர் ஆவார்.

இவர் மீது குடிபோதையில் பேருந்தை மறித்ததாக வழக்கு பதிவு செய்துள்ள நிலையில் தற்போது கூர்மையான ஆயுதம் வைத்திருந்ததாக வழக்குப் பதிவு செய்து நடவடிக்கை எடுத்துள்ளது பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

## அம்மைய நாயக்கனூர் பேரூராட்சியில் அனைத்து வார்டுகளிலும் மருத்துவ முகாம் நடத்த அமைக்க தீர்மானம்



வத்தலகுண்டு ஜன.12

திண்டுக்கல் மாவட்டம் அம்மையநாயக்கனூர் பேரூராட்சியில் மாதாந்திர கவுன்சில் கூட்டம் நடைபெற்றது இக்கூட்டத்திற்கு பேரூராட்சி தலைவர் செல்வராஜ் தலைமை வைத்தார் செயல் அலுவலர் பூங்கொடி முருகு முன்னிலை வைத்தார் தலைமை எழுத்தர் விவேக் வரவேற்றார்.

தமிழக அரசு உத்தரவுப்படி பேரூராட்சிக்கு உட்பட்ட வார்டுகள் அனைத்திலும் சிறப்பு மருத்துவ முகாம் அமைத்து சுகாதார முன்னெச்சரிக்கை நடவடிக்கை எடுக்கப்படும் அனைத்து வார்டுகளிலும் அடிப்படை பணிகள் முழுமையாக செய்யவும் சுகாதாரப் பணிகள் குறித்தும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன பேரூராட்சி பகுதிக்கு குடிநீர் ஆதாரமாக விளங்கும் அன்ன சமுத்திர கம்மாய்க்கு சிறுமலை நீர்த்தேக்கத்திலிருந்து தண்ணீர் கொண்டு வருவது குறித்து ஆலோசிக்கப்பட்டது.

இதில் கவுன்சிலர்கள் துணைத் தலைவர் விமல் குமார் கவுன்சிலர்கள் மீனாட்சி முத்து லட்சுமி கருணாகரன் மாரியப்பன் முஹம்மது நசீர் செல்வி சத்யா கவிதா ராஜாங்கம் துப்புரவு மேற்பார்வையாளர்கள் அசோக் குமார் மற்றும் அலுவலகப் பணியாளர்கள் என பலர் கலந்து கொண்டனர் முடிவில் சுகாதார ஆய்வாளர் செந்தில்குமார் நன்றி கூறினார்

## உலகப்புகழ் பாலமேடு ஜல்லிக்கட்டு திருவிழா மும்முரம்... சிறந்த காளைக்கு டிராக்டர், மாடுபிடி வீரருக்கு கார் பரிசு ! மடத்து கமிட்டி நிர்வாகிகள் தகவல்

அலங்காநல்லூர், ஜன.12

உலகப்புகழ்பெற்றபாலமேடு ஜல்லிக்கட்டு விழா வருகின்ற 15ஆம் தேதி புதன்கிழமை மாட்டுப்பொங்கல் அன்று நடைபெற உள்ளது.

இதையொட்டி ஜல்லிக்கட்டு விழா ஏற்பாடுகள் மும்முரமாக நடைபெற்று வருகின்ற நிலையில் பாலமேடு கிராம பொது மகாலிங்க சுவாமி கமிட்டி நிர்வாகிகள் ஆலோசனை கூட்டம் மற்றும் பத்திரிகையாளர்கள் சந்திப்பு நிகழ்ச்சி நேற்று நடைபெற்றது. இந்த நிகழ்ச்சிக்கு மடத்து கமிட்டி தலைவர் மச்சவேல், தலைமை தாங்கினார். செயலாளர் பிரபு, பொருளாளர் கார்த்திக் ஆகியோர் முன்னிலை வகித்தனர். கமிட்டி உறுப்பினர்கள் தேவராஜ், சரவணன், சேகர், குணசேகர், நித்திஷ்குமார், மணி, கந்தசாமி, விஜயகுமார், ஆகியோர் உடனிருந்தனர். கூட்டத்தில் பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.



அதன் பின்னர் பத்திரிகையாளர்களிடம் அளித்த பேட்டியில் மகாலிங்க சுவாமி மடத்து கமிட்டியினர் கூறியதாவது. வழக்கத்தை போலவே இந்த ஆண்டும் பாலமேடு ஜல்லிக்கட்டு சீரும் சிறப்புமாக எவ்வித தடையுமின்றி அரசு வழிகாட்டுதலுடன் மாவட்ட நிர்வாகத்தின் ஆலோசனைப்படி நடைபெறும். சிறந்த காளைக்கு முதல் பரிசாக ஒரு டிராக்டர் மற்றும் இரண்டாம் பரிசாக ரூ.1லட்சத்து 50ஆயிரம் மதிப்பில் கன்று குட்டியுடன் நாட்டு பசுமாடு வழங்க உள்ளோம். சிறந்த மாடுபிடி வீரருக்கு முதல் பரிசாக ஒரு கார் மற்றும் இரண்டாம் பரிசாக 1லட்சத்து 50ஆயிரம் மதிப்பில் பைக் பரிசாக வழங்க உள்ளோம். மேலும் ஜல்லிக்கட்டு போட்டியில் வெற்றி பெறும் காளைகள், மாடுபிடி வீரர்களுக்கு தங்கம், வெள்ளி நாணயங்கள், அண்டா முதல் சைக்கிள், பீரோ, பிரிட்ஜ், டிவி, கட்டில், உள்ளிட்ட அனைத்து வீட்டு உபயோக பொருட்களும் பல்வேறு விலை உயர்ந்த பரிசுகளும் இந்த ஆண்டும் வழங்க உள்ளோம்.

இந்த ஆண்டு ஜல்லிக்கட்டில் 1000 முதல் 1100 காளைகள் வரை வாடிவாசலில் அவிழ்த்து விட திட்டமிட்டுள்ளோம். காலை 7 மணிக்கு தொடங்கி மாலை 5 மணி வரை ஜல்லிக்கட்டு போட்டி நடத்த திட்டமிட்டுள்ளோம். முதலில் 7 கிராம கரை மாடுகள் அவிழ்த்து விடப்படும். டோக்கனில் குறிப்பிட்டுள்ள நம்பர் படியே வாடிவாசலில் காளைகள் அவிழ்த்து விடப்படும்.

இந்த ஆண்டு எவ்வித இடையூறும் இன்றி தமிழக அரசின் அனைத்து நடவடிக்கைகளுக்கும் கட்டுப்பட்டு ஜல்லிக்கட்ட சீரும் சிறப்புமாக நடைபெறும். பாலமேடு பேரூராட்சியின் ஒத்துழைப்போடு ஜல்லிக்கட்டு ஏற்படுகள் அனைத்தும் முன்னுரமாக நடைபெற்று வருகிறது. மேலும் இந்த ஆண்டு பார்வையாளர் அமரும் கேலரி கூடுதலாக அமைத்துள்ளோம். தவிர வெளி மாவட்டங்களில் இருந்து வரும் பார்வையாளர்களுக்கு ஆங்காங்கே தண்ணீர், உணவு வசதி, கழிப்பிட வசதி உள்ளிட்ட அடிப்படை தேவைகளை பாலமேடு மகாலிங்க சுவாமி மடத்துகமிட்டி நிர்வாகம் செய்து வருகிறது. மாவட்ட நிர்வாகம் அறிவிக்கும் நேரத்திற்குள் ஜல்லிக்கட்டை சிறப்பாக நடத்தி முடிக்க தீர்மானம் நிறைவேற்றியுள்ளோம்.

இவ்வாறு அவர்கள் தெரிவித்தனர்..

## சின்னமனூரில் உள்ள தனியார் பள்ளியில் தூய்மை விழிப்புணர்வு ரங்கோலி போட்டி



தேனி, ஜன.12

தேனி மாவட்டம் சின்னமனூரில் உள்ள (விகாசா பப்ளிக் பள்ளி) தனியார் பள்ளியில்

தமிழர் திருநாளாம் பொங்கல் திருநாள் விழா நடைபெற்றது.

இந்த விழாவில் பள்ளி மாணவ மாணவியர்களிடம் பிளாஸ்டிக் ஒழிப்பு மற்றும் சுற்றுப்புறத் தூய்மை குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் பெற்றோர்களுக்கு இடையேயான ரங்கோலி கோலப் போட்டியை நடத்தினார்கள்.

சுமார் 200க்கும் மேற்பட்ட பெற்றோர்கள் கலந்து கொண்டு ஆர்வத்துடன் பள்ளி மாணவ மாணவியர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் பல்வேறு சிறப்பம்ச ரங்கோலி கோலங்களை வரைந்தனர்.

30 நிமிடம் தொடர்ந்து நடைபெற்ற இந்த போட்டியில் பள்ளி மாணவ மாணவியர்கள் தங்களது பெற்றோர்கள் ரங்கோலி கோலம் வரைவதற்கு அவர்களை ஊக்கப்படுத்தும் விதமாக அவர்களுடன் போட்டியில் கலந்து கொண்டு வண்ணக் கோலம் வரைந்து பிளாஸ்டிக் ஒழிப்பு மற்றும் சுற்றுப்புறத் தூய்மை குறித்த ஓவியங்களை வரைந்து காட்சிப்படுத்தினார்கள்.

இந்த போட்டியில் சிறப்பாக கோலம் வரைந்து முதல் மூன்று இடங்களை பிடித்தவர்களுக்கு ரொக்க பரிசு மற்றும் கேடயத்தினை பரிசாக வழங்கினார்கள்.பள்ளியில் பெற்றோர்களுக்கிடையே நடைபெற்ற இந்த போட்டியை ஏராளமான பள்ளி மாணவ மாணவியர்கள் கண்டு களித்து உற்சாகம் அடைந்தனர்.

## வாடிப்பட்டி ஒன்றிய அனைத்திந்திய விவசாய கிராமப்புற தொழிலாளர் சங்கம் ஊழியர் பயிற்சி முகாம்

வாடிப்பட்டி, ஜன.11

மதுரை மாவட்டம்வாடிப்பட்டி ஒன்றிய அனைத்திந்திய விவசாய கிராமப்புற தொழிலாளர் சங்கம் ஊழியர் பயிற்சி முகாம் குட்லாடம் பட்டியில் நடந்தது. இந்த பயிற்சி முகாமிற்கு மாநில குழு உறுப்பினர் முத்துராக்கு தலைமை தாங்கினார். ஒன்றிய குழு உறுப்பினர் பகவதி வரவேற்றார். இதில் தேசிய குழு உறுப்பினர் ஈஸ்வரி, இந்திய கம்யூனிஸ்ட் கட்சி எம்.எல் மாவட்ட செயலாளர் மதிவாணன் சிறப்புரை ஆற்றினார். ஒன்றிய தலைவர் இரவீந்திரன் பயிற்சியளித்தார். இந்த பயிற்சி முகாமில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் வருமாறு :ஒவ்வொரு ஊராட்சியிலும் பொதுமக்கள் மற்றும் அனைவரின் பார்வைக்கும் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்ட என்.எம்.ஆர். வேலை செய்யும் தொழிலாளர்களின் பட்டியல் வைக்கப்பட வேண்டும்.



பஞ்சாயத்தில் இருக்கும் அட்டைகள் கிராம சபையில் தணிக்கை செய்யப்பட்டு இறந்தவர்கள் உள்ளிட்ட போலி அட்டைகள் நீக்கப்பட வேண்டும்.

வேலை அட்டை கோரும் மனுக்கள் இரண்டு ஆண்டுகளுக்கு மேல் கிடப்பில் போடப்பட்டுள்ளன. சட்ட விதிகளின்படி மனு கொடுத்த 15 நாட்களுக்குள் அட்டை கொடுக்க வேண்டும். ஊராட்சி தலைவர் களின் காலத்தில் நிர்வாகத்தில் பல்வேறு குறைபாடுகள், சிதைவுகள் ஏற்பட்டன. அதிகாரிகள் நிர்வாக பொறுப்பேற்றுள்ள இச்சமயத்தில் சட்டப்படியான நிர்வாக முறையில் உள்ள நபர்கள் பத்தாண்டுகளுக்கு மேல் பணியில் இருக்கும் பணித்தளப் பொறுப்பாளர்கள் நீக்கப்பட்டு புதிய நபர்கள் நியமிக்கப்பட வேண்டும். நிலுவையில் உள்ள குறைபாடுகளை முன்னிறுத்தியும், அனைவருக்கும் வேலை கொடுக்க வேண்டும், அறிவிக்கப்பட்ட சட்ட கூலியை அளிக்க வேண்டும் உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி ஜனவரி கடைசி வாரத்தில் ஊராட்சி ஒன்றிய அலுவலகம் முன்பு கண்டன ஆர்ப்பாட்டம் நடத்தப்படும் என்பது உள்பட தீர்மானங்கள் ஏக மனதாக நிறைவேற்றப்பட்டது.

## விக்கிரமங்கலம் அருகே உடல் உறுப்பு தானம் செய்த வாலிபருக்கு அரசு மரியாதை



சோழவந்தான் ஜன 12

சோழவந்தான் அருகே விக்கிரமங்கலம் ஊராட்சிக்கு உட்பட்ட செல்லம்பட்டி கிராமத்தைச் சேர்ந்த தவசிபாண்டி மகன் தங்கப்பாண்டி வயது 27. இவர் 2 நாட்களுக்கு முன்பாக நண்பர்களுடன் காரில் திருச்சி பகுதியிலுள்ள கோவிலுக்கு சென்றுவிட்டு ஊருக்கு திரும்பும் வழியில் கார் கதவு திறந்து கீழே விழுந்து தலையில் பலத்த காயம்பட்டு தங்கப்பாண்டி சம்பவ இடத்திலே இறந்தார்.

இவர் உடல் உறுப்பு தானம் செய்ததால் மதியம் கிராமத்தில் நல்லடக்கம் செய்யும் பொழுது உசிலம்பட்டி கோட்டாட்சியர் சண்முக வடிவேல் தாசில்தார் பாலகிருஷ்ணன் செல்லும்படி வடக்கு ஒன்றிய திமுக செயலாளர் சுதாகரன் வருவாய் அலுவலர் மணிமேகலை கிராம நிர்வாக அலுவலர் ரவிராஜன்மற்றும் கிராம பொதுமக்கள் தங்கபாண்டி உடலுக்கு மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத்தினர்.



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் சென்னையில் உள்ள முகாம் அலுவலகத்தில், ஈரோடு கிழக்கு தொகுதி சட்டமன்ற இடைத்தேர்தலில் போட்டியிடும் திராவிட முன்னேற்றக் கழக வேட்பாளர் வி.சி.சந்திரகுமார் சந்தித்து வாழ்த்து பெற்றார். உடன் நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன்,நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் .கே.என். நேரு, வனத்துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சி துறை அமைச்சர் சு.முத்துசாமி, திமுக கழக மாநில விவசாய அணி இணைச் செயலாளர் குறிஞ்சி என். சிவகுமார், ஈரோடு தெற்கு மாவட்ட கழக துணைச் செயலாளர் ஆ.செந்தில்குமார் ஆகியோர் உடன் இருந்தனர்.

## பெரியகுளத்தில் தனியார் மதுபான கூடம் அமைக்க எதிர்ப்பு தெரிவித்து சாலை மறியல்

பெரியகுளம், ஜன.12

தேனி மாவட்டம் பெரியகுளம் புதிய பேருந்து நிலையம் அருகே ஜாலி மனமகிழ் மன்றம் என்ற பெயரில் தனியார் மதுபானக்கூடம் திறக்க எதிர்ப்பு தெரிவித்து விடுதலை சிறுத்தைகள் கட்சியின் மாவட்ட செயலாளர் அரிமா ரபிக் தலைமையில், மண்டல செயலாளர் தமிழ்வாணன் முன்னிலையில் விடுதலைச் சிறுத்தைகள் கட்சியினர், சிறுபான்மையினர் மற்றும் அப்பகுதி பொதுமக்கள் ஒன்று கூடி தனியார் மதுபான கூடம் திறப்பதற்கு எதிர்ப்பு தெரிவித்து திடீர் சாலை மறியலில் ஈடுபட்டனர். சுமார் 200க்கும் மேற்பட்ட ஆண்கள், பெண்கள், குழந்தைகள், பெரியோர்கள் என பலர் சாலை மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர்.புதிய பேருந்து நிலைய சாலையில் பேருந்து பயணிகளுக்கு இடையூறாகவும், அப்பகுதியில் செயல்பட்டுவரும் மூன்று பள்ளி குழந்தைகளுக்கு பாதிப்புகள் ஏற்படும் வகையில் தனியார் மதுபான கூடமான ஜாலி மனமகிழ் மன்றம் திறக்கப்பட்டுள்ளது.



இக்கடையை இப்பகுதியில் இருந்து அப்புறப்படுத்தி போக்குவரத்திற்கும், பொது மக்களுக்கும் இடையூறு ஏற்படாத வகையில் வேறொரு பகுதியில் மாற்றி அமைக்க வேண்டி கோரிக்கை வைத்தனர். கடந்த ஆண்டு இதே பகுதியில் தனியார் மதுபான கூடம் திறக்கப்பட்டு பொதுமக்கள் எதிர்ப்பின் காரணமாக அவை மூடப்பட்டு நீதிமன்றம் மூலம் பொதுமக்கள் சார்பில் தடையாணை பெறப்பட்டது.

தற்பொழுது தடையானை விலக்கிக் கொள்ளப்பட்டுள்ள நிலையில் மீண்டும் அப்பகுதியில் தனியார் மதுபான கூடமான ஜாலி மன மகிழ் மன்றம் திறக்கப்பட் டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

## நிலக்கோட்டை அரசு மகளிர் கலைக் கல்லூரியில், பாரம்பரிய பொங்கல் விழா! மாணவிகள் உற்சாக கொண்டாட்டம்

வத்தலகுண்டு ஜன.12

திண்டுக்கல் மாவட்டம் நிலக்கோட்டை அரசு மகளிர் கலைக்கல்லூரியில் பாரம்பரியப் பொங்கல் விழாவில் பொங்கல் வைத்து மாணவிகள் கொண்டாடினார்கள். தமிழர் திருநாளாம் பொங்கல் திருநாளை முன்னிட்டு, பேராசிரியர்கள் மற்றும் கல்லூரி மாணவிகள் இணைந்து, கல்லூரி வளாகத்தில் வண்ண கோலமிட்டு, புதுப் பானையில் மஞ்சள் குங்குமம் வைத்து, மஞ்சள் காப்பு கட்டி, அடுப்பில் புதுப் பொங்கல் பானை வைத்தனர், பின்னர் பசும்பால், புது நெல்க்குத்தி எடுத்த பச்சரிசி, வெள்ளம், ஆகியவற்றை பானையில் போட்டு, சூரியன் இருக்கும் திசையில் பொங்கல் வைத்தனர்.



புதுப்பானையில் பொங்கி வரும் நேரத்தில் கல்லூரி மாணவிகள் அனைவரும் ஒன்றாக சேர்ந்து பொங்கலோ பொங்கல், என்று உணர்ச்சி கோசம் இட்டனர். மேலும் பொங்கல் வகைகளை கரும்புடன் படைத்து வழிபட்டனர். பொங்கல் திருநாளை முன்னிட்டு கும்மியடித்தும், நாட்டுப்புற பாடல்கள் பாடியும், நடனமாடி மகிழ்சியாக கல்லூரி மாணவிகள் பொங்கல் வைத்துக் கொண்டாடினார்கள். தமிழர்களின் ஒற்றுமைக்கும் சமத்துவத்திற்கும் எடுத்துக்காட்டாக இந்நிகழ்ச்சி இருந்தது.

இந்த பொங்கல் விழா நிகழ்ச்சிக்கு நிலக்கோட்டை அரசு மகளிர் கலை கல்லூரி கல்லூரி பொறுப்பு முதல்வர் கீதா தலைமை வகித்தார் இதில் பேராசிரியர்கள் லதா முருகவேல் சின்னச்சாமி முன்னிலையில் பொங்கல் விழா சிறப்பாக நடைபெற்றது. கல்லூரி பேராசிரியர்கள் மாணவ மாணவிகள் என பலர் கலந்து கொண்டனர். மாணவிகள் வண்ண வண்ண பட்டுடுத்தி பொங்கலிட்டு தங்கள் துறை சார்ந்த பொங்கல் வைத்து மகிழ்ச்சியாக சமத்துவ பொங்கல் கொண்டாடினார்கள்.



சிவகங்கை மாவட்டத்தில் சிலம்பாட்ட போட்டியில் வீரவிதை சிலம்ப அணி மாணவர்கள் 20 பதக்கங்களை வென்று சிவகங்கை மாவட்டத்தில் முதலிடம் பெற்றனர் மற்றும் 7 பேர் மயிலாடுதுறையில் நடைபெறவுள்ள மாநில அளவிலான போட்டிக்கு தகுதி பெற்றனர். வீரவிதை சிலம்ப அணி மாணவர்களை மானாமதுரை காவல் துணை கண்காணிப்பாளர் நிரேஷ் மாணவர்களை பாராட்டி வாழ்த்துக்களை தெரிவித்தார். இதற்கு பயிற்சியளித்த மாஸ்டர் கலைவளர் மணி டாக்டர் பெருமாளை பாராட்டினார்..

Printed , published by A.PONRAJ and printed at "SRI SAAI PRINTERS"No.122,Neethipathi,Rajasekaran Street, vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ.8508502161